


2023

# உமறுப்புலவர்
## தமிழ்மொழி நிலையம்

# மாணவர் கையேடு

Umar Pulavar Tamil Language Centre

# நிலையத்தின் பாடல்



எங்கெங்கிருந்தோ வருகிறோம் - புது
எண்ணங்களிங்கே பெறுகிறோம்
மொழியோடு பண்பாடும்
கலையும் பயிலும் ஒரு களஞ்சியம்
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் - தமிழ்
உயர்வு போற்றும் உன்னத நிலையம்... (எங்கள்)
உள்ளத்தனையது உயர்வு - அந்த
வள்ளுவன் சொல்லே அமுது
நாளுமே முழங்குவோம்
முன்னேறுவோம்!...முன்னேறுவோம்!...முன்னேறுவோம்!... (எங்கள்)
ஒற்றுமை ... நம்பிக்கை ...
எதையும் செய்வதில் தனித்திறமை ... அதில் புதுமை
ஆற்றலை... பெருக்குவோம்
ஆயுள் முழுவதும் படித்திடுவோம்... பகிர்ந்திடுவோம்
பெற்றோர் சமூக உறவினிலே - நாம்
இணைந்திருப்போம் பல வழியினிலே
இவை யாவுமே எங்களின் ஐம்பெரும் பண்புகள் ! - (உமறு)
தமிழ் மொழி நிலையம்!
வளமையின் இதயம்!
உன்னத நிலையம்!
உன்னத நிலையம்!!

எழுத்தும் இசையும்
முனைவர் எஸ்.பி.ஜெயராஜதாஸ் பாண்டியன்

# நமது நிலையத்தின் அடையாளச் சின்னம்




‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று பாடினான் நமது முண்டாசுக் கவிஞன் பாரதி. அத்தகைய பெருமைக்குரிய வள்ளுவனைத் தமிழ் சார்ந்த எவரும் உரிமை கொண்டாடத் தவறியதும் இல்லை, அப்படி உரிமை கொண்டாடுவதில் தவறேதும் இல்லை. அதற்கு நமது நிலையம் மட்டும் விதிவிலக்கா என்ன? வள்ளுவன் இல்லா தமிழ்மொழியா? வள்ளுவன் இல்லா தமிழ்மொழி நிலையமா? ஆம், தமிழர்களின் பெருமைமிக்க அடையாளச் சின்னமாகத் திகழும் திருவள்ளுவரே நம் நிலையத்தின் முகப்பை அலங்கரிக்கிறார். அவரது உருவம் நமது நிலையத்தின் முகப்பை அலங்கரிக்க அவர் உதிர்த்த ‘உள்ளத்தனையது உயர்வு’ என்ற வாசகமோ நமது நிலையத்தின் முழக்க வரியாக அமைந்துள்ளது. இவரது திருவுருவமும் முழக்கவரியும் நமது தமிழ் மாணவர்களுக்குத் திருவள்ளுவரையும் அவரது வாய்மொழியாம் திருக்குறளையும் நினைவூட்டும்பொருட்டு அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு
(குறள் எண் - 595)

தண்ணீரின் அளவுதான் அந்தத் தண்ணீரில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவாகவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் இருக்கின்ற ஊக்கத்தின் அளவினதாகவே இருக்கும்.

# உள்ளடக்கம்


| எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | உள்ளடக்கம் | 1 |
| 2 | வரவேற்பு | 2 |
| 3 | எங்கள் குறிக்கோளும் தொலைநோக்கும் | 3 |
| 4 | மாணவர் உறுதிமொழி | 4 |
| 5 | பொதுத் தகவல்கள் | 5 |
| 6 | பெற்றோரின் கவனத்திற்கு | 6 |
| 7 | நிலைய விதிமுறைகள் | 7 |
| 8 | தேர்வு விதிமுறைகள் | 8 |
| 9 | நிலையத்தில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களும் இணைப்பாடங்களும் | 9 |
| 10 | தேசிய விருப்பப்பாடங்கள் பற்றிய விவரங்கள் | 10 |
| 11 | 4. இந்திய நிகழ்த்துகலைகள் பற்றிய விவரங்கள் | 11 |
| 12 | 2023-ஆம் ஆண்டின் பாடவேளை அட்டவணை | 12 |
| 13 | தொடர்கணிப்பு / பருவத் / தேர்வு பற்றிய விவரங்கள் 2023 | 13 |
| 14 | 2023 நிலைய நிகழ்வுகள் | 14 – 15 |
| 15 | 2023-ஆம் ஆண்டின் பள்ளி நாட்களும் பள்ளி விடுமுறைகளும் | 16 |
| 16 | தேசிய கல்விச் செய்திகள் | 17 |
| 17 | 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள் | 18 |
| 18 | 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களோடு சார்ந்துள்ள அடிப்படை விழுமியங்கள் | 19 |
| 19 | இணைய நன்னடத்தை | 20 |
| 20 | இணையத்தில் பின்பற்றத்தக்க விதிமுறைகள் | 21 |
| 21 | தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் | 22 |
| 22 | பல்லூடக வளமை நூலகம் | 23 |
| 23 | தமிழ்க்கல்வி மரபுடையகம் | 24 |
| 24 | மூலிகைத் தோட்டம் | 25 |
| 25 | 2022 - இல் பரிசு பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் | 26 – 27 |
| 26 | 2022 - இல் சிறப்பு விருது பெற்ற மாணவர்கள் | 28 |
| 27 | 2022 - ஆம் ஆண்டின் உன்னத விருது பெற்ற மாணவி | 29 |
| 28 | 2023 - ஆம் ஆண்டின் நாள்காட்டி | 30 – 31 |
| 29 | நிலைய இயக்குநர், ஆசிரியர்களின் தொடர்பு விவரங்கள் | 32 |
| 30 | உதவிக்குரிய தொடர்பு எண்கள் | 33 |
| 31 | சமச்சீர் வாழ்க்கை முறைக்குரிய வழிகாட்டி | 34 |

# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் அன்புடன் வரவேற்கிறது

தமிழ்த்தாயின் செல்வங்களாம் தமிழ் மாணவமணிகளையும் பெற்றோர்களையும் தமிழாசிரியப் பெருமக்களையும் தமிழ்மொழி வளமையகமான உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் இனிதே வரவேற்கிறது. தமிழ்மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் இரு விழிகளாகக் கொண்டு திறம்படப் பணியாற்றும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து ஆக்கப்பூர்வமாகச் செயல்படக் கடப்பாடு கொண்டுள்ளது.

புத்தாக்க முறையில் தமிழ் கற்றல் கற்பித்தலுக்கு வழிவகுத்தல், கலவைமுறைக் கற்றல் மூலம் தமிழ் கற்க வழிவகுத்தல், தமிழையும் பண்பாட்டையும் சுயமாக உணர்ந்து கற்கத் தேவையான புதிய வளங்களையும் வாய்ப்புகளையும் உருவாக்குதல் எனப் பன்முக நோக்கில் தொடர்ந்து செயற்படவும் மாணவர்களுடைய கற்றல் பயணத்தை இனிமையானதாக்கவும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் உறுதிபூண்டுள்ளது.

21-ஆம் நூற்றாண்டில் பூத்த புதுமலர்களாம், மாணவர்கள் தாய்மொழிக் கற்றலின் வாயிலாகப் பெறும் அறிவையும் திறன்களையும் வாழ்வியல் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தும்வகையில் தொடர்ந்து நடவடிக்கைகளை வடிவமைக்க நிலையம் உறுதிமேற்கொண்டுள்ளது. 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுள் மிக முக்கியமானவையான உலகை உற்றுநோக்கிப் புரிந்துகொள்ளுதல், புரிந்துகொண்ட கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுதல், அவற்றைக் கொண்டு எதிர்காலப் போக்கிற்கேற்பப் புதியன படைத்தல் போன்ற திறன்களைப் பெற்று உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய மாணவர்கள் தங்கள் எதிர்காலத்திற்கு ஆயத்தமாகும்வண்ணம் கற்றல் கற்பித்தல் வளங்களைத் தொடர்ந்து உருவாக்குவதில் உமறுபுலவர் தமிழ்மொழி நிலையம் முனைப்புக் காட்டி வருகிறது. புத்தறிவைக் கொண்டு புதுமையினைப் படைக்கும் எதிர்காலச் சந்ததியினரை உருவாக்கும் உன்னதப் பணியினில் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் என்றும் முனைப்புடன் செயற்படும்.

மாணவமணிகளே! உங்களுடைய கற்றல் பயணம் இனிதே சிறக்க இம்மாணவர் கையேடு உறுதியாக வழிகாட்டும். நீங்கள் அனைவரும் கற்றலில் ஓங்கிச் சிறக்க நல்வாழ்த்துகள்.

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய ஆசிரியர்கள்
சிங்கப்பூர்



## குறிக்கோள் / Mission

தரமான தமிழ்க்கல்வியை வழங்குதல்.
To Provide Quality Tamil Language Education.

## தொலைநோக்கு / Vision

தமிழ்மொழியைத் துடிப்புடன் கற்று வாழ்நாள் முழுவதும் பயன்படுத்துதல்.
Active Learners and Lifelong Users of the Tamil Language.

## முழக்க வரி / Motto

உள்ளத்தனையது உயர்வு.
The Limit of A Man's Achievement is His Will!

## எங்கள் விழுமியங்கள் / Our Values

- U **Unity** for teamwork
  ஒற்றுமையே பலம்
- P **Positivity** for growth mindset
  உள்ளத்தனையது உயர்வு
- T **Tenacious** to rise again
  மீளுந்தன்மை
- L **Love** for Tamil Language
  தமிழ்மொழியின்பால் பற்று
- C **Care** for others
  பிறர்மீது அக்கறை

# மாணவர் உறுதிமொழி

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் நான்

சிறந்த பண்பாளராக நடந்துகொள்வேன்.

தமிழ்மொழியை நேசிப்பேன்.

குடும்ப ஒற்றுமைக்கும் மேன்மைக்கும் பாடுபடுவேன்.

கல்வியால் உன்னத நிலையை அடைந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பெயர் தேடித் தருவேன்.



# பொதுத் தகவல்கள்

நிலையத்தின் அலுவலகம் வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 6.15 மணி வரை செயற்படும்.

மாணவர்களைத் தவிர நிலையத்திற்கு வரும் மற்றவர்கள் பாதுகாப்பு அதிகாரியிடம் (Security Officer) சென்று நுழைவு அனுமதி அட்டையைப் (Visitors Pass) பெற்ற பிறகே உள்ளே வரவேண்டும்.

மாலை 6.05 மணிக்குமேல் மாணவர்கள் நிலைய வளாகத்தில் ஆசிரியர் துணையின்றித் தனிமையில் நடமாடக் கூடாது.



UPTLC Website - https://www.uptlc.moe.edu.sg/

# பெற்றோர்களின் கவனத்திற்கு

- வீட்டில் பிள்ளைகளுடன் தமிழ் பேசும் சூழலை ஏற்படுத்தவும்.
- தமிழ்ப் புத்தகங்களை அதிகமாக வாசிக்கப் பிள்ளைகளைத் தூண்டவும். முடிந்தால் அவர்களுடன் இணைந்து வாசிக்கவும்.
- நாள்தோறும் தமிழ்ச் செய்தித்தாளை வாசிக்கப் பிள்ளைகளை ஊக்கப்படுத்தவும்.
- தமிழில் உள்ள சிறந்த இணையப்பக்கங்களுக்குச் சென்று அவற்றில் உள்ளதை வாசிக்கத் தூண்டலாம். தேசிய நூலகத்தின் மின்னூல்களையும் படிக்கச் சொல்லவும்.
- வானொலியிலும் தொலைக்காட்சியிலும் வரும் தமிழ்ச் செய்தியையும் நடப்பு விவகார நிகழ்ச்சிகளைக் கேட்கவும் பார்க்கவும் ஊக்குவிக்கவும்.
- சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கில் தமிழ் அகராதியைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்.
- பிள்ளைகளை ஊக்கமூட்டும் வகையில் அவர்களது ஒவ்வொரு படைப்பையும் எழுத்து வேலையையும் பாராட்டவும்.
- ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுடன் செலவழிப்பதற்காக நேரத்தை ஒதுக்கவும்.
- பிள்ளைகளுடன் அணுக்கமான உறவை வளர்த்துக்கொள்ள அவர்களுடன் சேர்ந்து பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடவும்.
- உங்கள் பிள்ளையை மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதைத் தவிர்த்து அவர்களிடமுள்ள தனித்துவத்தை அடையாளங்கண்டு அதனைப் பாராட்டி ஊக்குவிக்கவும்.
- உங்கள் பிள்ளைகளின் நண்பர்களையும் நட்பு வட்டத்தையும்பற்றி அறிந்துவைத்துக் கொள்ளவும்.
- உங்கள் பிள்ளையின் உடல் நலம், மன நலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது முன்னேற்றப் பாதைக்கு முடிந்தவரை ஆதரவு அளிக்கவும்.



https://tinyurl.com/uptlcPARENTS2022



# நிலைய விதிமுறைகள்

1. நிலையத்திற்கு வரும்போது பள்ளிச் சீருடையில் வருதல் வேண்டும். விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.
2. நிலைய வளாகத்திற்குள் எப்பொழுதும் தமிழிலேயே உரையாடுதல் வேண்டும்.
3. வகுப்புகளுக்குக் கட்டாயம் குறித்த காலத்திற்குள் வர வேண்டும்.
4. வகுப்புகளுக்குத் தவறாது வருதல் வேண்டும். வர இயலாவிட்டால் தக்க சான்றுகளை ஆசிரியரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
5. வீட்டுப்பாடங்கள், ஒப்படைப்புகளை உரிய நேரத்தில் செய்து ஒப்படைத்தல் வேண்டும்.
6. வகுப்பு நேரங்களில் ஆசிரியரின் அனுமதியோடுதான் வெளியே செல்லுதல் வேண்டும்.
7. வகுப்பறைக்குள் கைத்தொலைபேசியை ஆசிரியரின் அனுமதியோடு பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்.
8. நிலைய வளாகத்திலுள்ள வகுப்பறைகளையும் கழிவறைகளையும் நிலையத்தின் உடைமைகளையும் சேதப்படுத்தாமல் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
9. நிலையத்திற்கு வரும் மாணவர்கள் பிறரைக் காயப்படுத்தக்கூடிய எந்த ஒரு பொருளையும் கொண்டு வரக்கூடாது. மீறினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.
10. எப்பொழுதும் நேர்மையுடனும் பணிவுடனும் பொறுமையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.



# தேர்வு தொடர்பான விதிமுறைகள்

- தகுந்த காரணமின்றி எந்தத் தேர்வுக்கும் வராமல் இருக்கக் கூடாது. தகுந்த காரணமின்றித் தேர்வுக்கு வராத மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டா.



## பொது விதிமுறைகள்

- மாணவர்கள் தகுந்த காரணமின்றி இரண்டு வகுப்புகளுக்குமேல் வரவில்லை என்றால், முதலில் பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப்படும். அதன் பின்னர், மாணவர்களது பள்ளியிலுள்ள வகுப்பாசிரியருக்கும் தகவல் தெரிவிக்கப்படும். இம்மாணவர்கள் துறைத் தலைவரைச் சந்தித்து வகுப்புக்கு வராததற்கான காரணத்தைக் கூற வேண்டும். தக்க காரணம் கூறப்படவில்லை என்றால் அந்த மாணவருடைய பள்ளியின் முதல்வருக்குத் தகவல் தெரிவிக்கப்படும்.

- தவிர்க்க முடியாத காரணங்களால் வகுப்பு முடிவடைவதற்கு முன்னரே, மாணவர்கள் யாரும் வீட்டுக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டால், அவர்கள் தமிழாசிரியர் / பெற்றோர் அனுமதியைப் பெற வேண்டும். பிறகு, பொது அலுவலகத்திலிருக்கும் குறிப்பேட்டில் தம் விவரங்களை எழுதிவிட்டுச் செல்ல வேண்டும்.



# நிலையத்தில் கற்றுக்கொடுக்கப்படும் பாடங்களும் சிறப்புப் பாடங்களும்

| பாடங்கள் | |
|---|---|
| உயர்நிலை 1 முதல் 4 வரை | உயர்தமிழ் |
| | விரைவுநிலை |
| | வழக்கநிலை |
| | அடிப்படைத்தமிழ் |
| | தமிழ் 'B' பாடம் |
| உயர்நிலை 3, 4 | தமிழ் இலக்கியம் |

| சிறப்புப் பாடங்கள் | |
|---|---|
| உயர்நிலை 1 – 4 உயர்தமிழ்<br>தொடக்கக் கல்லூரி<br>பயிலும் மாணவர்களுக்குரியது H2 | தேசிய தமிழ்மொழி<br>விருப்பப்பாடத் திட்டம் |
| தொடக்கநிலை 3-முதல் தொடக்கக்<br>கல்லூரி 2-ஆம் ஆண்டுவரை | இந்திய நிகழ்த்துகலை<br>வகுப்புகள் |

### வளமூட்டும் நடவடிக்கைகள்
(தொடக்கப்பள்ளி முதல் தொடக்கக்கல்லூரி வரை)

- தொடக்கப்பள்ளி 5-ஆம் வகுப்பிற்குரிய தமிழ்மொழி கற்றல் விழா
- உயர்நிலை 2-ஆம் வகுப்பிற்குரிய தமிழ்மொழி கற்றல் முகாம்
- உயர்தமிழ் 1-ஆம் வகுப்பிற்குரிய தமிழ்மொழி பண்பாட்டு முகாம்
- தமிழ்மொழி விழா
- உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய போட்டிகள்
- மாணவர் சங்கமம் (Students Forum)
- தமிழ்மொழி நிலையத்தில் பயிலும் நிறைநிலை மாணவர்களுக்குரிய கற்றல் முகாம் - சிகரம் தொடு!
- பெற்றோர்களுக்குரிய பயிலரங்குகள்




**பாட விபரங்கள்:**

- ஒரு வகுப்புக்கு ஓர் ஆண்டில் 2 சிறப்புப் பாடங்கள் நடைபெறும்.
- ஒரு பருவத்திற்கு 1 சிறப்புப் பாடம் (10 மணிநேரம்) – 4 வகுப்புகள் (2.5 மணிநேரம்)
- சனிக்கிழமைகளில் சிறப்புப் பாடங்கள் நடைபெறும்
- ஆண்டுக்கு 8 பாட வகுப்புகள் மட்டுமே!

**இவ்வாண்டு சிறப்புப் பாடங்கள் நடைபெறும் தேதிகள்:**

உயர்நிலை 1 முதல் 3 வரை

- **முதல் பருவம்** - i. பிப்ரவரி 11-ஆம் தேதி முதல் மார்ச் 4-ஆம் தேதி வரை
- **இரண்டாம் பருவம்** – ii. ஆகஸ்ட் 2-ஆம் தேதி முதல் செப்டம்பர் 2-ஆம் தேதி வரைரை

உயர்நிலை 4, தொடக்கக் கல்லூரி 1 & 2

- **முதல் தவணை** - iii. பிப்ரவரி 11-ஆம் தேதி முதல் மார்ச் 4-ஆம் தேதி வரை
- **இரண்டாம் தவணை** – iv.மே 6-ஆம் தேதி முதல் மே 27-ஆம் தேதி வரை

NETP - https://go.gov.sg/uptlcnetpinfo



# இந்திய நிகழ்த்துகலை வகுப்புகள்

## Indian Performing Arts Programme

நடனம் DANCE

வாய்ப்பாட்டு VOCAL

வீணை VEENAI

வயலின் VIOLIN

பறை PARAI

மிருதங்கம் MIRUTHANGAM

புல்லாங்குழல் FLUTE

- சனிக்கிழமைகளில் காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை நடைபெறும்.
- தொடக்கநிலை 3 முதல் தொடக்கக்கல்லூரி வரை
- கட்டணம் எதுவுமில்லை
- சிறந்த பயிற்றுவிப்பாளர்களால் வழிநடத்தப்படும்






விவரங்களுக்கு:
https://tinyurl.com/registrationIPAP2023

# 2023 பாடவேளை அட்டவணை

## Academic Timetable 2023

| LEVEL | CLASSES | ACTUAL LESSON<br>3PM to 6PM (Includes 15 minutes break) | MAKE UP LESSON<br>3PM to 6PM (Includes 15 minutes break) |
|---|---|---|---|
| **Secondary 1** | Higher Tamil | Monday | Wednesday |
| | Express | Monday | Wednesday |
| | Normal Academic | Thursday | Friday |
| | Normal Technical | Thursday | Friday |
| | Tamil B | Tuesday | Friday |
| **Secondary 2** | Higher Tamil | Monday | Wednesday |
| | Express | Tuesday | Friday |
| | Normal Academic | Tuesday | Friday |
| | Normal Technical | Thursday | Friday |
| | Tamil B | Thursday | Friday |
| **Secondary 3** | Higher Tamil | Monday | Wednesday |
| | Express | Thursday | Friday |
| | Normal Academic | Tuesday | Friday |
| | Normal Technical | Thursday | Friday |
| | Tamil B | Thursday | Friday |
| | Tamil Lit | Tuesday | Friday |
| **Secondary 4** | Higher Tamil | Monday | Wednesday |
| | Express | Thursday | Friday |
| | Normal Academic | Tuesday | Friday |
| | Normal Technical | Thursday | Friday |
| | Tamil B | Thursday | Friday |
| | Tamil Lit | Thursday | Friday |
| **Secondary 5** | Normal Academic | Thursday | Friday |

*Note: * Monday, Tuesday & Thursday – Actual Lesson Days ** Wednesday & Friday – Make-up Lesson Days*

Contact information: For any clarifications, please contact - Mr K.Saravanan, SH, Umar Pulavar Tamil Language Centre **6298 0781** (Ext:506) or at **Saravanan_K@moe.edu.sg**



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
கல்வி அமைச்சு

## வவறுபட்ட மதிப்பளவிலொன மதிப்பீடு / ஆண்டிறுதித் வதர்வு - அட்டவலை 2023

## WEIGHTED ASSESSMENT / END OF YEAR EXAMINATION - TIME TABLE 2023

| Type of Assessment | Level | Time Frame | Remark |
|---|---|---|---|
| **WA 1** | **Sec 4 Levels** (HT,Exp,NA,NT,TLB) | **T1-** Week 8<br>20 Feb to 24 Feb (Mon - Fri) | **During curriculum time** |
| | **Sec 1, 2, 3,** HT, Exp, NT, NA, Lit in Tamil | **T1-** Week 8<br>20 Feb to 24 Feb (Mon - Fri) | |
| **PRELIM EXAM 1** | **Sec 4Exp / 5na & 4TLB** | **T2-** Week 4,5 & 6<br>10 Apr – 28 Apr (Mon - Fri)<br>Paper 1,2,3 | **During curriculum time** |
| **WA 2** | **Sec 1, 2, 3** HT, Exp, NA, NT, LIT, TLB | **T2-** Week 7 - 8<br>Wk 8: 02 May -12 May (Mon - Fri) | **During curriculum time** |
| **PRELIM EXAM** | **Sec 4NA & 4NT** | **T3-** Week 4 & Week 5<br>18 Jul to 25 Jul (Tues - Fri) | **During curriculum time** |
| | **Sec 4 HT & 4 Lit** | **T3-** Week 6 & Week 7<br>31 Jul to 11 Aug (Mon - Fri) | |
| **WA 3** | **Sec 1, 2, 3** HT, Exp, NT, NA, Lit in Tamil | **T3-** Week 7 & 8<br>07 Aug to 18 Aug (Mon - Fri) | **During curriculum time** |
| **EYE** | **Sec 1, 2, 3** HT, Exp, NT, NA, Lit in Tamil | **T4-** Week 2 & Week 3<br>18 Sep to 29 Sep (Mon - Fri) | **During curriculum time** |
| **PRELIM EXAM 2** | **Sec 4Exp / 5NA & 4TLB** (2nd attempt) | **T4-** Week 2 & Week 3<br>18 Sep to 29 Sep | **During curriculum time** |

All SA and Preliminary Examinations will be held at UPTLC. Students are required to be at the Examination Venue / assigned Classroom on time. Late comers will not be entertained.

WA/SA Schedule: https://go.gov.sg/uptlcwasa

# நிலைய நிகழ்வுகள் 2023
## Centre Activities for 2023

| Term | Week | Date | Activities |
|---|---|---|---|
| 1 | 1 | 07-01-2023 (Sat) | நிகழ்த்து கலைகள் தொடக்கம்<br>Start of Indian Performing Arts Programme (IPAP)<br>(F2F for Sec & JC students. (Online for Primary students) |
| | 5 | 30-01-2023 (Mon) | பொங்கல் விழா<br>Pongal Celebration (Internal) |
| | | 04-02-2023 (Sat) | அறிமுக தினம்<br>Orientation Programme |
| | | | தமிழும் உங்கள் பிள்ளையும்<br>Tamil and Your Child (Briefing for graduating students' parents) (Sec 3 & 4) |
| | 8 | 25-02-2023 (Sat) | தமிழ்மொழி கற்றல் விழா (உயர்நிலை 2)<br>Tamil Language Learning Festival (TLLF) (Secondary 2) |
| | 7-10 | 18-02-2023 to 11-03-2023 (Sat) | தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் – முதலாம் சிறப்புப் பாடங்கள்<br>NETP Module 1, for all levels-Secondary and JC classes (4 Saturdays) |
| | 10 | 25-03-2023 (Sat) | கற்றல் முகாம்<br>Study Camp for Sec 3HTL, 4NA & 4Ex/5NA students (Paper 2) |

| Term | Week | Date | Activities |
|---|---|---|---|
| 2 | 1 | 01-04-2023 (Sat) | கற்றல் முகாம்<br>Study Camp for Sec 3HTL, 4NA & 4Ex/5NA students (Paper 1) |
| | 4 | 15-04-2023 (Sat) | தமிழ்மொழி கற்றல் விழா (தொடக்கநிலை 5)<br>Tamil Language Learning Festival 2023 (TLLF-Primary 5)<br>& பெற்றோர் கருத்தரங்கு 2023 |
| | 7-10 | 06-05-2023 to 27-05-2023 (Sat) | தேசியத் தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் – முதலாம் சிறப்புப் பாடங்கள்<br>NETP Module 1, for all levels-Secondary and JC classes (4 Saturdays) |
| | 9 | 15-05-2023 To 22-05-2023 | தேசியநிலைத் தேர்வுக்கான தீவிரப் பயிற்சி வகுப்புகள் (தினமும்)<br>Intensive Mother Tongue for Sec 4E/5NA & 4TLB (Daily) |
| | | 18-05-2023 & 19-05-2023 (Fri & Sat) | பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு<br>Parent-Teacher Meet (I) |
| | | 20-05-2023 (Sat) | தமிழ்மொழி & பண்பாட்டு முகாம் (உயர்தமிழ் 1)<br>Tamil Lang & Cultural Camp for Sec 1HT students |
| | | 22-05-2023 (Mon) | உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய வளாகத்திற்குக் கற்றல் பயணம்<br>Learning journey to UPTLC - Post Exam Activities (for 11 centres Students/LS |
| | 10 | 29-05-2023 to 30-05-2023 (Sat) | தேசியத் தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் -முகாம் |

| Term | Week | Date | Activities |
|---|---|---|---|
| 3 | 2 | 08-07-2023 (Sat) | இலக்கியப் பாட அறிமுகம் (உயர்நிலை 2 உயர்தமிழ் / விரைவு)<br>Literature in Tamil - Outreach for Secondary 2Exp and 2HTL (UPTLC) |
| | 6 | 05-08-2022 (Sat) | நிலையத்தின் 46-வது ஆண்டு பரிசளிப்பு விழா<br>46th UPTLC Annual Speech & Prize Presentation Ceremony<br><br>தமிழ்த் திருவிழா<br>Tamil Fest 2023 |
| | 7 to 10 | 12-08-2022 to 02-09-2023 (Sat) | தேசிய தமிழ்மொழி விருப்பப் பாடத் திட்டம் – இரண்டாம் சிறப்புப் பாடங்கள்<br>NETP Module 2 for Sec 4HT, JC1, JC2 students (4 Saturdays) |
| | 10 | 28-08-2022 | உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய வளாகத்திற்குக் கற்றல் பயணம்<br>Learning journey to UPTLC |

| Term | Week | Date | Activities |
|---|---|---|---|
| 4 | 1 | 16-09-2023 | இந்திய நிகழ்த்துகலை - IPAP |
| | 2 | 23-09-2023 (Sat) | இலக்கியப் பாட அறிமுகம் (உயர்நிலை 1 உயர்தமிழ் / விரைவு)<br>Literature in Tamil - Outreach for Secondary 2Exp and 2HTL (UP-TLC Students & Other schools) |
| | 6 | 21-10-2023 (Sat) | உமறுப்புலவர் நிலைய மாணவர்களுக்குரிய கலந்துரையாடல்<br>Forum 2023 for UPTLC students |
| | 7 | 23-10-2022 to 27-10-2022 (Mon – Fri) | தேர்வுக்குப் பிந்திய நடவடிக்கைகள் (உயர்நிலை 1 முதல் 3)<br>Post Exam Activities (Sec 1-3) |
| | 8 | 04-11-2022 (Fri) | நிகழ்த்துகலைகள் தினம்<br>IPAP Day |
| | 10 | 15-11-2023 (Wed) | நிறைநிலை மாணவர்களுக்குரிய பிரியாவிடை<br>UPTLC Graduation Day Celebrations<br>(All Graduating Classes) |

# 2023-ஆம் ஆண்டின் பள்ளி நாட்களும் பள்ளி விடுமுறைகளும்

## School Terms And Holidays For 2023

### 1) பள்ளி நாள்கள் / School Terms

| உயர்நிலைப் பள்ளி / Secondary Schools | |
|---|---|
| பருவம் 1 / Semester 1 | |
| தவணை 1<br>Term 1 | Tue 3 Jan to Fri 10 Mar |
| தவணை 2<br>Term 2 | Mon 20 Mar to Fri 26 May |
| பருவம் 2 / Semester 2 | |
| தவணை 3<br>Term 3 | Mon 26 Jun to Fri 1 Sept |
| தவணை 4<br>Term 4 | Mon 11 Sept to Fri 17 Nov |
| Last Day of Secondary School: Fri, 28 October 2022 | |

### 2) பள்ளி விடுமுறைகள் / School Vacation

| உயர்நிலை / Secondary |
|---|
| Sat 11 Mar to Sun 19 Mar |
| Sat 27 May to Sun 25 Jun |
| Sat 2 Sep to Sun 10 Sep |
| Sat 18 Nov to Sun 31 Dec |

### 3) Scheduled School Holidays

| | |
|---|---|
| Youth Day | **Sun 2 Jul<br>(Mon 3 Jul will be a scheduled school holiday)** |
| Day after National Day | **Thur 10 Aug** |
| Teachers' Day | **Fri 1 Sept** |

மேல் விவரங்களுக்கு : **https://www.moe.gov.sg/calendar.**



## National Education Messages

சிங்கப்பூர் நமது தாயகம்; இந்த நாட்டிற்கு உரிமையுடையவர் நாம்.
Singapore is our homeland; this is where we belong.

இன, சமய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்போம்.
We must preserve racial and religious harmony.

தகுதிக்கு முதன்மை கொடுப்போம்; ஊழலைத் தடுப்போம்.
We must uphold meritocracy and incorruptibility.

சிங்கப்பூரின் உயிர்வாழ்வுக்குக் கடப்பாடு உடையவர்கள் நாமே; வேறு யாரும் அல்லர்.
No one owes Singapore a living.

நம் எதிர்காலத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.
We have confidence in our future.

சிங்கப்பூரை நாமே தற்காக்க வேண்டும்.
We must ourselves defend Singapore.

# 21-ஆம் நூற்றாண்டுத் திறன்கள்

## 21st Century Competencies







இருபதாம் நூற்றாண்டு மனப்பாங்குடன் இருபத்தோராம் நூற்றாண்டை வலம்வர நினைத்தால் நாம் நிறைய இழப்புகளைச் சந்திக்க வேண்டிவரும்.

டாம் ஷ்டேயர்



# 21- ஆம் நூற்றாண்டுத் திறன்களோடு சார்ந்துள்ள அடிப்படை விழுமியங்கள்

### மதிப்பு

தனது சுயமதிப்பில் நம்பிக்கைகொண்டு, மற்றவரின் மதிப்பை உணர்ந்து செயற்படும்போது ஒரு மாணவன் மதிப்புடன் நடந்து கொள்கிறான்.

### செயற்படும்போது

தனக்கும், தன் குடும்பத்தார், சமூகம், நாடு மற்றும் உலகத்திற்கும் தான் கடமைப்பட்டவன் என்பதை ஒரு மாணவன் உணர்ந்து, தனது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றும்போது அவன் பொறுப்புணர்வு உள்ளவன் ஆகிறான்.

### நாணயம்

நியாயமான கொள்கைகளைக் கடைப்பிடித்து, நல்லனவற்றுக்காகப் பாடுபட ஒரு மாணவன் மனவுறுதி கொள்ளும்போது அவன் நாணயமான மனிதன் ஆகிறான்.

### அக்கறை

கனிவாகவும் கருணையுடனும் நடந்துகொண்டு, சமூகம் மற்றும் உலகத்தின் மேம்பாட்டுக்காக உழைக்கும்போது ஒரு மாணவன் அக்கறையுள்ளவன் ஆகிறான்.

### தோல்வியைக் கண்டு துவளாமை

மனவலிமையும் சவால்களை ஏற்றுத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியும் இருக்கும்போது ஒரு மாணவன் தோல்வியைக் கண்டு துவளாதவன் ஆகிறான். அப்போது அவன் தைரியம் உள்ளவனாகவும் நேர்ச்சிந்தனை கொண்டவனாகவும் சூழ்நிலைக்கேற்பச் செயல்படக்கூடிய வளங்கள் உடையவனாகவும் காணப்படுகிறான்.

### அமைதி

மனமகிழ்ச்சியை நாடி, சமூக ஒருமைப்பாட்டை ஆதரிப்பவனாக இருந்தால், ஒரு மாணவன் அமைதியை மதிப்பவனாக ஆகிறான். பல பண்பாட்டினர் இணைந்து வாழும் சமூகத்தில், மக்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் புரிந்துகொள்கிறான்.



# இணைய நன்னடத்தை

இணைய நன்னடத்தை என்பது இணையத்தைப் பயன்படுத்துவோரின் நலனையும் இணையத்தின்வழி ஒருவர் எதிர்நோக்கும் சிக்கலுக்குரிய நடத்தைகளைப் புரிந்துகொண்டு அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதையும் குறிக்கிறது. இன்றைய சூழலில் மின்னிலக்கப்பயன்பாடு அதிகம் ஊக்குவிக்கப்படுவதால் இணைய உலகில் செயற்படுவதற்குத் தேவையான திறன்களையும் பண்புநலன்களையும் மாணவர்கள் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். இணையத்தில் உலாவரும் வேளையில் மாணவர்கள் தன்னையும் பிறரையும் மதித்து நடப்பதோடு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றிப் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும். மாணவர்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கலந்துரையாடி, கலந்துறவாடி கற்றலில் ஈடுபடும்போது நட்பு வட்டத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதோடு தொழில்நுட்பத்தின் பயன்பாடு நமது சமூகத்தின் நலனுக்குப் பயன்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் .




**Sense – Think – Act Process**

<u>**உணர்தல்**</u> – தவறான அல்லது தீய நடத்தைகளைக் கண்டறிந்து பாதுகாத்துக் கொள்ளுதல்

<u>**சிந்தித்தல்**</u> – இணையத்தில் எதிர்கொள்ளும் சூழலை 3 இணைய நன்னடத்தை விதிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, தவறா சரியா என மதிப்பீடு செய்து கற்றுக்கொள்ளுதல்

<u>**செயல்படுதல்**</u> – உணர்ந்து, சிந்தித்தவற்றைச் செயல்படுத்தி இணையத்தில் பாதுகாப்பாகவும் சரியான முறையிலும் உலாவருவதல்.

**இணைய நன்னடத்தை குறித்த மூன்று முக்கியக் கோட்பாடுகள்**

1. தன்னையும் பிறரையும் மதித்து நடத்தல்
2. பாதுகாப்பாகவும் பொறுப்பாகவும் பயன்படுத்துதல்
3. நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல்



# இணையத்தில் பின்பற்றத்தக்க விதிமுறைகள்

**1**

**உறுதியான கடவுச் சொல்லை உருவாக்குக**




ஒவ்வொரு இணையப் பயன்பாடுகளுக்குமான கடவுச்சொற்களை யாராலும் ஊகித்தறிந்து உங்களது மின்னியல் கணக்குகளை ஊடுருவ முடியாத அளவுக்கு மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

**2**

**சந்தேகத்திற்குரிய தகவல்களை /குறிப்புகளை மூடிவிடுங்கள்**



உங்களது மின்னியல் சாதனங்களுக்குள் அல்லது இணையத்தளங்களுக்குள் ஊடுருவுவதற்காகச் சிலர் போலியான தகவல்களை உருவாக்கி உங்களுக்கு அனுப்ப வாய்ப்புள்ளது. எனவே, இதுபோன்ற சந்தேகத்துக்குரிய தகவல்கள் தோன்றினால் அவற்றைப் புறக்கணித்துவிட்டு உடனே அத்தகவல்களை மூடிவிடுவது நல்லது. அவற்றை மூடமுடியவில்லை என்றால் நீங்கள் பயன்படுத்தும் மின்னியல் சாதனத்தை மூடிவிடவும்.

**3**

**சந்தேகத்துக்குரிய இணைப்புக் கோப்புகளை அல்லது இணைப்புகளை அழித்துவிடுதல்**



முன்பின் அறியாத நபரிடமிருந்தோ அல்லது தளங்களிலிருந்தோ வரும் இணைப்புக் கோப்புகளையும் இணைப்புகளையும் சந்தேகத்துக்குரியவை என எண்ணி முன்னெச்சரிக்கையுடன் அவற்றைத் திறக்காமல் இருக்கவும். மேலும், ஆண்டி-வைரஸ் மென்பொருளை உங்களது மின்னியல் சாதனங்களில் பதிவேற்றம் செய்துவைத்துக்கொண்டு உங்களது மின்னியல் சாதனங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்.

**4**

**சமூக ஊடகங்களில் தனிநபர் இரகசியங்களைப் பாதுகாப்பாக அமைத்துக்கொள்ளுதல்.**



சமூக ஊடகங்களில் உங்களது தகவல்களைப் பகிர்ந்துகொள்வதில் கவனமாக இருக்கவும். நீங்கள் எவ்வளவு அதிகமாக உங்களைப் பற்றிய தகவல்களைப் பதிவிடுகிறீர்களோ அந்த அளவுக்கு உங்களது சமூக ஊடகத்தளத்தை ஊடுருவி உங்களது அடையாளத்தைத் திருடவும் பயன்படுத்தவும் பிறருக்கு வழிவகுத்துக்கொடுக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

- தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்தினுள் நுழைந்தவுடன் பள்ளிப் பைகளை வலது அல்லது இடது ஓரங்களில் வைத்துவிட வேண்டும்.
- நிலையத்தின் விதிமுறைகளைத் தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்தினுள்ளும் கடைப்பிடிக்க வேண்டும்.
- ஆசிரியரின் அனுமதியில்லாமல் எந்தவொரு சேமிக்கும் கருவியையும் (saving device) தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்தினுள் கொண்டுவரக் கூடாது. இதன் மூலம் கணினிகள் கிருமிகளால் பாதிக்கப்படுவதைக் குறைக்க இயலும்.
- தகவல்தொடர்புத் தொழில்நுட்பக் கூடத்திலிருந்து எந்தக் கருவியையும் வெளியே எடுத்துச் செல்லக் கூடாது.
- பாடத்தின் முடிவில் கணினியை நிறுத்திவிடுவதுடன் (Shut Down the PC) நாற்காலிகளை ஒழுங்காக மேசைக்கு அடியில் தள்ளி வைக்கவும்.





# பல்லூடக வளமை நூலகம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய வளமை நிலையமாகவும் செயற்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் உள்ள வசதிகளில் பல்லூடக வளமை நூலகமும் ஒன்று. இந்நூலகத்தில் 12,000 புத்தகங்கள் உள்ளன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரையுள்ள நூல்கள் உள்ளன. உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்கள் பலவும் இங்குள்ளன.

கல்விப் பயணமாக நூலகத்திற்கு வரும் மாணவர்களுக்கும் நிலையத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் முகாம்களில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கும் நூலகத்தில் பல நடவடிக்கைகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. இவற்றின் மூலம் மாணவர்கள் தமிழ்மொழியில் வளம்பெற்று வருகின்றனர்.

- ஆசிரியர்களும் மாணவர்களும் மட்டுமே உறுப்பினர்களாகச் சேர முடியும்.
- ஆசிரியர்களும் மாணவர்களும் நூலகத்திலுள்ள நூல்களை 2 வாரப் பயன்பாட்டிற்கு இரவல் பெறலாம். (ஆசிரியர்கள் ஒரு முறை 5 நூல்களையும் மாணவர்கள் 2 நூல்களையும் இரவல் பெறலாம்).
- மேற்கோள் நூல்களை இரவல் பெற முடியாது.
- மாணவர்களின் பெற்றோர்கள் புத்தகங்களை இரவல் வாங்க விரும்பினால் வகுப்பாசிரியரை நாடலாம்.

‘புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்’
- பாரதிதாசன்



# தமிழ்க்கல்வி மரபுடைமையகம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் தமிழ்க்கல்வி மரபுடைமையகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது சிங்கப்பூரில் தமிழ்க்கல்வி, உமறுப்புலவர் தமிழ்மொழி நிலைய வரலாறு, தமிழ்க்கல்வி வளர்ச்சியில் சமூக அமைப்புகளின் பங்களிப்பு, தமிழ்க்கலைகளும் பண்பாடும் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் தமிழ்க்கல்வியின் தொடக்கக் காலம் முதல் இன்றுவரை அடைந்துள்ள வளர்ச்சி, செயிண்ட் ஜார்ஜஸ் தமிழ்ப்பள்ளி தமிழ்மொழி நிலையமாக மாறிய பின்னர் உமறுப்புலவர் என்று பெயர் சூட்டப்பட்ட தகவல், சமூக அமைப்புகளின் பங்களிப்பு போன்றவை இம்மரபுடைமையகத்தில் இடம்பெற்றுள்ளன. தமிழ்க்கலைகளும் பண்பாடும் என்னும் பிரிவில் பாரம்பரியக் கலைகள் மற்றும், விளையாட்டுகள்பற்றி விளக்கப்பட்டுள்ளன. மேலும், செம்மொழியான தமிழ்மொழி பற்றிய விளக்கங்களும் உலக அளவிலும் சிங்கப்பூர் அளவிலும் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் தொடர்பான நிகழ்வுகளும் 'நம் சாதனையாளர்கள்' பகுதியில் தமிழவேள் கோ.சாரங்கபாணி, ஏ.என்.மொய்தீன், நா.கோவிந்தசாமி ஆகியோரின் சாதனைகளும் விளக்கப்பட்டுள்ளன.

இங்குக் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளவை யாவும் தமிழ் மாணவர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பயன்படும் வளங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

நமது தமிழ்க்கல்வி மரபுடைமையகம் அன்றைய துணைப் பிரதமரும் நிதியமைச்சரும் மனிதவள அமைச்சருமான தர்மன் சண்முகரத்தினம், அன்றைய பிரதமர் அலுவலக அமைச்சரும் உள்துறை, தொழில் வர்த்தக அமைச்சுகளுக்கான இரண்டாம் அமைச்சருமான எஸ் ஈஸ்வரன் ஆகியோரால் 2012 – ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4-ஆம் தேதி அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

> "புனல்சூழ்ந்து வடிந்து போன
> நிலத்திலே புதிய நாளை
> மனிதப் பைங்கூழ் முளைத்தே
> வகுத்தது மனித வாழ்வை
> இனிய நற்றமிழே நீதான் எழுப்பினை"
>
> \- அழகின் சிரிப்பு

**விளக்கம்**

இந்த நில உலகு தோன்றிய காலத்திலேயே தமிழினம் தோன்றிவிட்டது. மனித வாழ்வை உருவாக்கியதே தமிழ்மொழி என்று தமிழினத் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக்கிறார் பாரதிதாசன்.





# நிலையத்தின் மூலிகைத் தோட்டம்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் இடம்பெற்றுள்ள வளமைகளுள் ஒன்று மூலிகைத்தோட்டம். இத்தோட்டம் மாணவர்கள் `உணவே மருந்து` என்ற உண்மையை உணர்ந்துகொள்வதையும், நம் முன்னோர்கள் கண்டறிந்த மூலிகைகளைப்பற்றித் தெரிந்துகொள்வதையும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



இத்தோட்டத்தில் நம் பண்பாட்டோடு இணைந்த மஞ்சள், இஞ்சி, துளசி, வெற்றிலை, மருதோன்றி (மருதாணி), கறிவேப்பிலை, பூசணி, சுரை போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட செடிகொடிகளும் முக்கனிகளைத் தரும் மாமரம், பலாமரம், வாழைமரம் போன்ற மரங்களும் இடம்பெற்றுள்ளன.



Community in Bloom
Awards 2021

SILVER

Umar Pulavar Tamil Language Centre
Herb Garden
Achieved
SILVER

Kenneth Er
Chief Executive Officer
National Parks Board

நமது நிலையத்தின் மூலிகைத் தோட்டத்தின் சிறப்பைப் பாராட்டி தேசிய பூங்கா வாரியம் 'Community in Bloom' என்னும் வெள்ளி விருதைத் தந்து சிறப்பித்துள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்!

# 2022 – இல் ஏட்டுக்கல்வியில் பரிசு பெற்றவர்களின் பெயர்ப்பட்டியல்

| NO | Name of Students | Name of SEC School | UPTLC CLASS 2022 | RANK |
|---|---|---|---|---|
| 1 | NITHIASRI BALAKRISHNAN | CHIJ ST. JOSEPH'S CONVENT | 1HT | 1st |
| 2 | MUHAMMED AAQIL | TANJONG KATONG SEC SCH | 1HT | 2nd |
| 3 | CHASHMITRA KRISHNAN | CHIJ KATONG CONVENT | 1HT | 3rd |
| 4 | SELVAM ASHVIKA | CHIJ KATONG CONVENT | 1EXP | 1st |
| 5 | RUBAINA AAFREEN | CHIJ KATONG CONVENT | 1EXP | 2nd |
| 6 | VASUMATHI | ASSUMPTION ENGLISH SCH | 1EXP | 3rd |
| 7 | AFZAL S/O HUMAYUN KABEER | GEYLANG METHODIST SEC SCH | 1NA | 1st |
| 8 | MUHAMMAD SAQHEEL | GEYLANG METHODIST SEC SCH | 1NA | 2nd |
| 9 | VIKNESH MANIMARAN | BROADRICK SEC SCH | 1TLB | 1st |
| 10 | THIRUMALAISAMY LEVESTRI | SENGKANG SEC SCH | 2HT2 | 1st |
| 11 | YOGANANDHAN HARINI SAI | YIO CHU KANG SEC SCH | 2HT2 | 2nd |
| 12 | SUNDARRAJAN DHIRAJ | ST. GABRIEL'S SEC SCH | 2HT2 | 3rd |
| 13 | BALASUBRAMANIAN AKSHAYA | CHIJ KATONG CONVENT | 2E | 1st |
| 14 | ATHINARAYANAN MAHALAXSHMI | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 2E | 2nd |
| 15 | SENTHILKUMAR SHIVA | YISHUN TOWN SEC SCH | 3HT3 | 1st |
| 16 | SIVAKUMAR DIVYADHARSHNI | CHIJ ST. JOSEPH'S CONVENT | 3HT2 | 2nd |
| 17 | SALEEM RAJA NADHIRA BANU | CHIJ KATONG CONVENT | 3HT1 | 3rd |
| 18 | SALEEM RAJA NADHIRA BANU | CHIJ KATONG CONVENT | 3LITT | 1st |
| 19 | RAJAGOPALAN SRINITHY | TANJONG KATONG GIRLS' SCH | 3LITT | 2nd |
| 20 | MANIKANDAN SWEDA | TANJONG KATONG GIRLS' SCH | 3LITT | 3rd |
| 21 | MOHAMAD FARIS FATHIMA ZAHABIA | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 3EXP | 1st |
| 22 | THASBEEHA D/O MOHD FAZLUL HUCK | GEYLANG METHODIST SEC SCH | 3EXP | 2nd |
| 23 | MUTHIAH S/O NACHIAPPAN | XIN MIN SEC SCH | 3NA | 1st |
| 24 | SHAHANAS D/O MOHAMMED SIKKANDER | MANJUSRI SEC SCH | 3NT | 1st |
| 25 | ARYAN ANAND | ST. ANDREW'S SEC SCH | 3TLB | 1st |
| 26 | P.VEERA LAKSHMI | GUANGYANG SEC SCH | 3TLB | 2nd |
| 27 | HIREAN MURLI MANGUDI | YISHUN TOWN SEC SCH | 4HT2 | 1st |
| 28 | CHOCKALINGAM RAJA DHANYAA | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 4HT2 | 2nd |
| 29 | HARITHA D/O ELANCHELIAN | YISHUN SEC SCH | 4HT2 | 3rd |
| 30 | SELVARAJ VISHALINI | ANDERSON SEC SCH | 4LITT | 1st |
| 31 | MOHAMED KAMILDEEN SHAMESJASRA | CHIJ KATONG CONVENT | 4LITT | 2nd |
| 32 | BALASUBRAMANIAN DHEJASSRI | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 4LITT | 3rd |
| 33 | M NIVETHA | GEYLANG METHODIST SEC SCH | 4EXP | 1st |
| 34 | SHAKTI D/O THULASIRAMAN | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 5NA | 1st |



# தமிழ்ப்பாடங்களில் அதிக மேம்பாடு கண்ட மாணவர்களுக்குரிய விருதுகள் - 2022

## Good Progress Award 2022

தமிழ்ப்பாடத்தில் அதிக மேம்பாடு கண்டுவரும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

| NO | Name of Students | Secondary School | UPTLC CLASS |
|---|---|---|---|
| 1 | SENTHIL KUMAR SUCHITHRA | CHIJ KATONG CONVENT | 1HT |
| 2 | MOHAMED FAAYIZ S/O MOHAMED JAHEER HUSSAIN | GEYLANG METHODIST SCH SEC | 1NT |
| 3 | JAIDERN RAVINDRAN | HOLY INNOCENTS HIGH SCH | 1NA |
| 4 | NUR ARISHA BINTI MOHAMED RADZIF | TANJONG KATONG GIRLS SCH | 1TLB |
| 5 | NASHIRAH D/O MOHAMED IRFAN | CHIJ KATONG CONVENT | 2E |
| 6 | SUNDARAPANDIAN SRINIDHI | ST.HILDA'S SECONDARY SCH | 2HT |
| 7 | MOHAMED AKSAM | GEYLANG METHODIST SCH | 3E |
| 8 | TANUSHA ISMAIL | 3NA | 3NA |
| 9 | DHANAPALAN LEENA SANDRA | CHIJ KATONG CONVENT | 3HT1 |
| 10 | SRINIVASAN RAMANATHAN | ST. PATRICK'S SCH | 3HT2 |
| 11 | KAMADCHI CHANDRSEKAR | ANDERSON SEC SCH | 3Lit |
| 12 | NIVEETA BALAKUMARAN | CHIJ KATONG CONVENT | 3NT |
| 13 | KESHAV P CHIDAMBARAM | EDGEFIELD SEC SCH | 4E |
| 14 | RAMU THAMODHARAN MAGILAN | COMPASSVALE SECONDARY SCH | 4HT1 |
| 15 | M AKSHAYAA | BEDOK SOUTH SEC SCH | 4HT2 |
| 16 | SENTHILKUMAR SHRIGITHA | ST. ANTHONY'S CANOSSIAN SEC SCH | 4HT3 |
| 17 | YUSUF CHOUTHURY HARLINAH FAJULA (F) | BEATTY SEC SCH | 4Lit |
| 18 | MARGAREATH D/O FRANCIS | CHIJ KATONG CONVENT | 4NA |
| 19 | R NURALISHA D/O RAMSANSHA | MANJUSRI SEC SCH | 4NT |
| 20 | YASHWINI D/O RAVINDRAN | CHIJ TOA PAYOH SEC SCH | 4TLB |



# 2022 – ஆம் ஆண்டுக்கான சிறப்பு விருதுகள் பெற்ற மாணவர்கள்



இந்திய நிகழ்த்துகலை
வகுப்புகளுக்கான சிறப்பு விருது
செல்வராஜ் விஷாலினி



செயல்வழி விழுமிய
நடவடிக்கைகளுக்கான சிறப்பு விருது
கமலக்கண்ணன் யாழினி



செயல்வழி விழுமிய
நடவடிக்கைகளுக்கான சிறப்பு விருது
மணிகண்டன் ஸ்வேதா



# 2022 - ஆம் ஆண்டின் உன்னத விருதைப் பெற்ற செல்வி முகமட் கமில்தீன் ஷேம்ஸ் ஜெஸ்ரா



உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின், 2022-ஆம் ஆண்டுக்கான உன்னத விருதைப் பெற்றவர், மாணவி, செல்வி முகமட் கமில்தீன் ஷேம்ஸ் ஜெஸ்ரா. இவர் நம் நிலையத்தில், உயர்தமிழ், தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களைப் பயின்றவர். இவர் நிலையத்தில் நடைபெற்ற, பல்வேறு நிகழ்ச்சிகளிலும் முனைப்புடன் கலந்துகொண்டு, தம் பங்கைச் செவ்வனே ஆற்றியவர். செல்வி ஜெஸ்ரா, நல்ல தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராகவும் விளங்கினார். பணிவும் கனிவும் மிக்க இவர், மிகவும் இணக்கமான மாணவியாகவும் தொண்டூழியத்திலும் ஆர்வத்துடன் முன்வந்து செயலாற்றும் மாணவியாகவும் திகழ்ந்தவர்.

# உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், கல்வி அமைச்சு

## UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE, MINISTRY OF EDUCATION

## CALENDAR OF EVENTS 2023

**Semester 1**

| Day | January TERM 1 | | February TERM 1 | | March TERM 1 & 2 | | April TERM 2 | | May TERM 2 | | June TERM 3 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sat | | | | | | | 1 | IPAP Study Camp for Sec 3HTL, 4 Ex/ 5NA & 4 NA (Paper 2) | | | | |
| Sun | 1 | New Year's Day | | | | | 2 | | | | | |
| | | Week 1 | | | | | | Week 3 | | Week 7 | | |
| Mon | 2 | School Holiday (New Year's Day falls on Sunday) | | | | | 3 | | 1 | Labour Day | | |
| Tue | 3 | Sec 1 & new students' Registration All classes to commence | | | | | 4 | | 2 | (02 May to 12 May) Weighted assessment 2 – (Sec 1, 2, 3 levels – All courses) | | |
| Wed | 4 | | 1 | | 1 | WA1 Marks will be sent to schools by DMT | 5 | | 3 | Prelim paper viewing & Lessons (4Exp & 4TLB) | | |
| Thu | 5 | | 2 | | 2 | | 6 | | 4 | | 1 | |
| Fri | 6 | | 3 | | 3 | | 7 | Good Friday | 5 | | 2 | |
| Sat | 7 | Indian Performing Arts Programme (IPAP) e-Registration | 4 | IPAP | 4 | IPAP NETP Module-1, Lesson 3 for all levels (09.30am to 12.00nn) | 8 | IPAP | 6 | IPAP Commencement of NETP Module-2, Lesson 1 for S4HT & JC 1&2 classes (09.30am to 12.00nn) | 3 | Vesak Day |
| Sun | 8 | | 5 | Thaipusam | 5 | | 9 | | 7 | | 4 | |
| | | Week 2 | | Week 6 | | Week 10 | | Week 4 | | Week 8 | | |
| Mon | 9 | NETP Registration for all HT & JC classes (New & Current students) | 6 | (06 Feb to 17 Feb) Weighted Assessment 1 (Oral) - (Sec 4 – All courses) | 6 | Learning Journey to UPTLC | 10 | Prelim Exam - Sec 4 Exp & 4TLB Or & LC | 8 | (02 May to 12 May) Weighted assessment 2 (Sec 1, 2, 3 levels – All courses) | 5 | School Holiday (Vesak Day falls on Saturday) |
| Tue | 10 | | 7 | | 7 | | 11 | | 9 | | 6 | Protected Time (5/6 – 18/6) |
| Wed | 11 | | 8 | | 8 | | 12 | | 10 | | 7 | |
| Thu | 12 | | 9 | | 9 | | 13 | | 11 | | 8 | |
| Fri | 13 | | 10 | | 10 | | 14 | | 12 | | 9 | |
| Sat | 14 | | 11 | IPAP Orientation Day (Sec 1& all new students) Tamil & Your Child (Sec 3&4/5) | 11 | NETP Module-1, Lesson 4 for all levels (09.30am to 12.00nn) | 15 | Parental Seminar TLLF for Primary 5 | 13 | IPAP NETP, Module-2, Lesson 2 for S4HT & JC 1&2 classes (09.30am to 12.00nn) | 10 | |
| Sun | 15 | Thai Pongal | 12 | | 12 | | 16 | | 14 | | 11 | |
| | | Week 3 | | Week 7 | | | | Week 5 | | Week 9 | | |
| Mon | 16 | | 13 | (06 Feb to 17 Feb) Weighted Assessment 1 – (Written) Sec 4 – All courses Weighted assessment 1 - (Sec 1, 2, 3 levels – All courses) | 13 | Term 1 Vacation Protected Leave (PL) | 17 | (17 Apr to 21 Apr) Prelim Exam - Sec 4 Exp & 4TLB Paper 1 | 15 | (15 May to 19 May) Intensive Mother Tongue for Sec 4E/5NA & 4TLB (Daily) (During Curriculum Time) Oral Practice for sec 3HT/4E/5N/4TLB | 12 | Term 2 Vacation 27 May to 25 June 2023 |
| Tue | 17 | (17 Jan to 20 Jan) Target Setting for EOs and EAS | 14 | | 14 | PL (13/3 – 14/3) | 18 | | 16 | | 13 | |
| Wed | 18 | | 15 | | 15 | workday | 19 | | 17 | Prelim Marks (4Exp & 4TLB) & WA2 Marks will be sent to schools by DMT | 14 | |
| Thu | 19 | | 16 | | 16 | workday | 20 | | 18 | | 15 | |
| Fri | 20 | Chinese New Year Celebration in schools. Lessons are as usual at UPTLC. | 17 | Weighted Assessment 1 – 3TLit and 4TLit | 17 | SWC Activity | 21 | | 19 | (18 May to 19 May) Parent-Teacher Meet (I) | 16 | |
| Sat | 21 | | 18 | IPAP Commencement of NETP Module-1, Lesson 1 for all levels (9.30am to 12.00nn) | 18 | IPAP | 22 | Hari Raya Puasa | 20 | NETP, Module-2, Lesson 3 for S4HT & JC 1&2 classes (09.30am to 12.00nn) Sec 1 HTL Camp | 17 | |
| Sun | 22 | Chinese New Year | 19 | | 19 | | 23 | | 21 | | 18 | |
| | | Week 4 | | Week 8 | | T2 - Week 1 | | Week 6 | | Week 10 | | |
| Mon | 23 | Chinese New Year | 20 | (20 Feb to 24 Feb) Weighted assessment 1 - (Sec 1, 2, 3 levels – All courses) | 20 | | 24 | School Holiday (Hari Raya Puasa falls on a Saturday) | 22 | (22 May to 26 May) Intensive Mother Tongue for Sec 4E/5NA & 4TLB (Daily) Learning Journey to UPTLC Post - exam activities (for 11 Centre students/LS) | 19 | |
| Tue | 24 | School Holiday after Chinese New Year | 21 | | 21 | | 25 | | 23 | | 20 | |
| Wed | 25 | | 22 | | 22 | | 26 | Prelim Exam - Sec 4 Exp & 4TLB Paper 2 | 24 | | 21 | IPAP |
| Thu | 26 | | 23 | | 23 | | 27 | | 25 | Work Review Submission of Mid-year Session 1 (EOs) | 22 | |
| Fri | 27 | | 24 | | 24 | | 28 | | 26 | | 23 | IPAP |
| Sat | 28 | IPAP | 25 | NETP Module-1, Lesson 2 for all levels (09.30am to 12.00nn) TLLF for Secondary 2 | 25 | IPAP Study Camp for Sec 3HTL, 4 Ex/ 5NA & 4 NA (Paper 1) | 29 | IPAP | 27 | NETP, Module-2, Lesson 4 for S4HT & JC 1&2 classes (09.30am to 12.00nn) | 24 | |
| Sun | 29 | | 26 | | 26 | | 30 | | 28 | | 25 | |
| | | Week 5 | | Week 9 | | Week 2 | | | | | | T3 - Week 1 |
| Mon | 30 | Pongal Celebration cum launch of VR | 27 | | 27 | | | | 29 | TLEP/NETP Camp | 26 | |
| Tue | 31 | | 28 | | 28 | | | | 30 | TLEP/NETP Camp | 27 | |
| Wed | | | | | 29 | | | | 31 | | 28 | |
| Thu | | | | | 30 | | | | | | 29 | |
| Fri | | | | | 31 | | | | | | 30 | |
| Sat | | | | | | | | | | | | |





**Semester 2**

| Day | July TERM 3 | | August TERM 3 | | September TERM 3 & 4 | | October TERM 4 | | November TERM 4 | | December | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sat | 1 | UPTLC's Student forum | | | | | | | | | | |
| Sun | 2 | Youth Day | | | | | 1 | | | | | |
| | | Week 2 | | | | | | Week 4 | | | | |
| Mon | 3 | School Holiday (Youth Day falls on a Sunday) | | | | | 2 | (02 Oct to 06 Oct) EYE Paper viewing & Lessons Intensive MT for Sec 4HT(Daily) | | | | |
| Tue | 4 | | 1 | | | | 3 | | | | | |
| Wed | 5 | | 2 | Final dry run for Speech Day | | | 4 | | 1 | | | |
| Thu | 6 | | 3 | | | | 5 | | 2 | | | |
| Fri | 7 | | 4 | Prelim exam for Sec 4TLit (P1) Setting up for event | 1 | Teachers Day | 6 | EYE Marks will be sent to schools by DMT | 3 | IPAP Nights | 1 | Protected Time (1/12 – 27/12) |
| Sat | 8 | IPAP Literature Outreach to Sec 2 Parents | 5 | 46th Annual Speech & Prize Presentation Ceremony Tamil Fest 2023 | 2 | | 7 | | 4 | | 2 | |
| Sun | 9 | | 6 | | 3 | | 8 | | 5 | | 3 | |
| | | Week 3 | | Week 7 | | | | Week 5 | | Week 9 | | |
| Mon | 10 | | 7 | (07 Aug) Prelim exam for Sec 4HT (P2) (07 Aug to 18 Aug) Weighted Assessment 3 - (LC & Written) Sec 1, 2, 3 levels – All courses | 4 | Term 3 Vacation 1 September to 8 September 2023 | 9 | | 6 | STAFF MEETING | 4 | Term 4 Vacation 25 November to 31 December 2023 |
| Tue | 11 | | 8 | | 5 | | 10 | | 7 | IPAP | 5 | |
| Wed | 12 | | 9 | National Day | 6 | | 11 | | 8 | | 6 | |
| Thu | 13 | | 10 | School Holiday after National Day | 7 | | 12 | | 9 | Work Review - Session 2 (EOs)-Submission of EPMS | 7 | |
| Fri | 14 | | 11 | Prelim exam for Sec 4TLit (P2) | 8 | | 13 | | 10 | | 8 | |
| Sat | 15 | | 12 | IPAP NETP, Module-2 Lesson 3 for 1HT, 2HT, 3HT (9.30am to 12nn) | 9 | IPAP | 14 | IPAP | 11 | | 9 | |
| Sun | 16 | Hari Raya Haji | 13 | | 10 | | 15 | | 12 | Deepavali | 10 | |
| | | Week 4 | | Week 8 | | Week 1 | | Week 6 | | Week10 | | |
| Mon | 17 | School Holiday (Hari Raya Haji falls on a Sunday) | 14 | (07 Aug to 18 Aug) Weighted Assessment 3 - (LC & Written) Sec 1, 2, 3 levels – All courses | 11 | | 16 | (16 Oct to 20 Oct) Intensive MT for Sec 3HT, 4HT,4E/5N, 4Lit & 4TLB (Daily) | 13 | School Holiday (Deepavali falls on a Sunday) | 11 | |
| Tue | 18 | (18 Jul to 21 Jul) Preliminary Examinations for 4NA (P1), 4NT (P1, 2 & 3) | 15 | | 12 | | 17 | | 14 | | 12 | |
| Wed | 19 | | 16 | | 13 | | 18 | | 15 | Graduation Day Celebration (5.30 – 8pm) (All graduating classes) | 13 | |
| Thu | 20 | | 17 | Prelim Marks (4NA & 4NT) & WA3 Marks will be sent to schools by DMT | 14 | | 19 | | 16 | | 14 | |
| Fri | 21 | 1st Rehearsal for 46th Annual Speech & Prize Presentation | 18 | | 15 | | 20 | | 17 | | 15 | |
| Sat | 22 | IPAP Commencement of NETP Module-2 Lesson 1 for 1HT, 2HT, 3H (9.30am to 12nn) | 19 | IPAP NETP, Module-2 Lesson 4 for 1HT, 2HT, 3HT (9.30am to 12nn) | 16 | IPAP MITT 2023 | 21 | IPAP | 18 | | 16 | |
| Sun | 23 | | 20 | | 17 | | 22 | | 19 | | 17 | |
| | | Week 5 | | Week 9 | | Week 2 | | Week 7 | | | | |
| Mon | 24 | Preliminary Examinations for Sec 4NA (P2) | 21 | (21 Aug to 25 Aug) EYE: Oral (1HT & 2 HT) (1Exp, 2Exp, 3Exp) (S 1NA, 2NA, 3NA) (1NT, 2NT, 3NT) 1TLB, 2TLB, 3TLB) | 18 | (18 Sep to 22 Sep) EYE: Written & LC (S 1NT, 2NT, 3NT), (S 1TLB, 2TLB, 3TLB) EYE: Paper 1 (Sec 1 to 3) (HT, Exp, NA) Preliminary Examination (2nd attempt) S 4E/5N (P1) S 4TLB (P1, 2 & 3) | 23 | (23 Oct to 27 Oct) Intensive MT for Sec 3HT, 4HT,4E/5N, 4Lit & 4TLB (Daily) Post exam activities (Sec 1-3) Learning Journey to UPTLC | 20 | NETP & TLEP Overseas immersion programme | 18 | |
| Tue | 25 | | 22 | 22 Aug to 25 Sep) Prelim paper viewing for 4HT & 4TLit Intensive MT for Sec 4NT/4NA classes (Daily) | 19 | | 24 | | 21 | | 19 | |
| Wed | 26 | | 23 | | 20 | | 25 | | 22 | | 20 | |
| Thu | 27 | | 24 | | 21 | | 26 | STAFF RETREAT | 23 | | 21 | |
| Fri | 28 | 2nd Rehearsal for 46th Annual Speech & Prize Presentation | 25 | Prelim (4HT, 4NA, 4NT) and WA3 Marks will be sent to schools by DMT | 22 | EYE: Lit in Tamil S3 Lit (Full - P1) | 27 | Last day for Secondary School students STAFF RETREAT | 24 | | 22 | |
| Sat | 29 | IPAP 3rd Rehearsal for 46th Annual Speech & Prize Presentation NETP, Module-2 Lesson 2 for 1HT, 2HT, 3H (9.30am to 12.00nn) | 26 | IPAP MTLS | 23 | IPAP Lit Outreach for Sec 2s (UPTLC & other schools) | 28 | IPAP | 25 | | 23 | |
| Sun | 30 | | 27 | | 24 | | 29 | | 26 | | 24 | |
| | | Week 6 | | Week 10 | | Week 3 | | Week 8 | | | | |
| Mon | 31 | Prelim exam for Sec 4HT (P1) | 28 | Learning Journey to UPTLC | 25 | (25 Sep to 29 Sep) EYE: Paper 2 & LC (S 1HT, 2HT, 3HT) (S 1E, 2E, 3E) (S 1N, 2N, 3N) Preliminary Examination (2nd attempt), Sec 4E/5N (P2) | 30 | Work Week & Intensive revision for Graduating Students | 27 | | 25 | Christmas Day |
| Tue | | | 29 | | 26 | | 31 | | 28 | | 26 | |
| Wed | | | 30 | | 27 | | | | 29 | | 27 | |
| Thu | | | 31 | Teachers' Day Celebration in Schools | 28 | | | | 30 | End of Work week | 28 | SMT Meeting |
| Fri | | | | | 29 | EYE: Lit in Tamil S3 Lit (Full & Elective – P2) | | | | | 29 | |
| Sat | | | | | 30 | IPAP | | | | | 30 | |
| Sun | | | | | | | | | | | 31 | New Year's Eve |

## Contact list of CD and Teachers
## Office Telephone Number: 6298 0781

| | | | |
|---|---|---|---|
| 1 | நிலைய இயக்குநர்<br>Centre Director | திருவாட்டி சாந்தி செல்லப்பன்<br>Mdm Santhi Sellappan<br>Santhi_Sellappan@schools.gov.sg | Ext.505 |
| 2 | துறைத் தலைவர்<br>(தமிழ்மொழி & தமிழ் இலக்கியம்)<br>(Head of Department/Tamil Language & Tamil Lit) | திரு கே சரவணன்<br>Mr K Saravanan<br>saravanan_k@moe.edu.sg | Ext.506 |
| 3 | பாடத்தலைவர்<br>தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்<br>Subject Head/ICT | செல்வி சீதா சக்திவேல்<br>Ms Seetha Sakthivel<br>seetha_sakthivel@moe.edu.sg | Ext.512 |
| 4 | மூத்த ஆசிரியர்<br>Senior Teacher | திருமதி சுமதி சேகர்<br>Mrs Sumathi Segar<br>sumathi_segar@moe.edu.sg | Ext.510 |
| 5 | ஆசிரியர்கள்<br>Teachers | திரு சீதாராமன் தங்கராஜ்<br>Mr Seetharaman Thangaraju<br>seetharaman_thangaraju@moe.edu.sg | Ext.508 |
| 6 | | திருவாட்டி வேணுகோபால் சண்முகவள்ளி<br>Mdm Venugopal Shanmugavalli<br>venugopal_shanmugavalli@moe.edu.sg | Ext.507 |
| 7 | | திரு கோவிந்தசாமி சந்தன்ராஜ்<br>Mr Govindasamy Santhanraj<br>govindasamy_santhanraj@moe.edu.sg | Ext.511 |
| 8 | | செல்வி மீனாம்பாள் பரமசிவம்<br>Miss Meenambal Paramasivam<br>meenambal_paramasivam@moe.edu.sg | Ext.514 |
| 9 | | திருவாட்டி நுசைபா பேகம்<br>Mdm Nuzaibah Begum<br>nuzaibah_begum_saynuthem@moe.edu.sg | Ext.516 |
| 10 | | திரு வீரப்பன் திருமலைசாமி<br>Mr Veerappan Thirumalaisamy<br>veerapan_thirumalaisamy@moe.edu.sg | Ext.509 |



# உதவிக்குரிய தொடர்பு எண்கள்

| எண் | சேவை | தொடர்பு |
|---|---|---|
| 1 | **eC2**<br>e-Counselling Centre where you can talk to a trained counsellor about the issues you are facing, right where you are. | admin@eC2.sg |
| 2 | **SOS**<br>Samaritans of Singapore<br>Provides emotional support and befriending to those who are despairing, discouraged or distressed | 1800 - 221 4444<br>www.samaritans.org.sg |
| 3 | **ComCare Hotline**<br>Individual, Marital & Family casework and counselling<br>Financial Aid Services for Youth Information & Referral | 1800 - 222 0000 |
| 4 | **IMH Emergency Hotline**<br>Urgent intervention for those who experience acute difficulties in their mental health | 6389 2003<br>6389 2004 |
| 5 | **Touchline**<br>Touch Youth Intervention aims to empower youths to reach their full potential and achieve their emotional and relational wellbeing. Its area of focus are cyber wellness, mental health and youth issues. | 1800 612 3123<br>hello@help123.sg<br>cyberwellness@touch.org.sg |
| 6 | **Audible Hearts**<br>An online peer support network supported by HPB. Aims to raise awareness on mental well-being among youths and empower them to provide peer support within their communities. | audiblehearts.sg |
| 7 | **SINDA Tuition Service**<br>SINDA Family Service Centre assist individuals andfamilies facing financial, marital, parenting, as well as other interpersonal and family related issues and challenges. | 1800 – 295 3333 |









# சமச்சீர் வாழ்க்கை முறையைப் பின்பற்றுங்கள்

| | | |
|---|---|---|
| உடல்நலம் | உனது உடல்நலத்தில் போதிய அக்கறை காட்டி வருகிறாயா? | • உரிய நேரத்தில் தேவையான அளவு சாப்பிடு<br>• போதிய அளவு ஓய்வு எடுத்துக்கொள்<br>• போதுமான அளவு உடற்பயிற்சி செய்<br>• தேவைப்படும்போது மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள் |
| மனநலம் | வாழ்க்கையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைச் சரியாகக் கையாளுகிறாயா? | • உனது உணர்வுகளை முறையாக வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டாதே!<br>• உனக்கு ஏதும் மனவருத்தமோ குழப்பமோ ஏற்பட்டால் தயங்காமல் யாரிடமாவது பகிர்ந்துகொள்<br>• நியாயமான எதிர்பார்ப்புகளை வைத்துக்கொள்<br>• உன்னைச் சுற்றி நேர்மறையான எண்ணங்கள் நிறைந்திருக்கும்படி பார்த்துக்கொள் |
| சமூக நலம் | உனது வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் யார்? | • உனது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் போதிய நேரம் ஒதுக்கு<br>• புதிய ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்<br>• உன்னால் முடிந்தளவு தேவைப்படும்போது பிறருக்குத் துணையாய் இரு |
| பள்ளி மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை நலம் | பள்ளி அனுபவங்கள் உனக்கு மகிழ்ச்சியைத் தரும் வகையில் உள்ளனவா? | • ஆர்வத்தோடு படி<br>• உனது வேட்கை எது எனக் கண்டுபிடி<br>• உனது நேரத்தைச் சரியாக நிர்வகிக்கக் கற்றுக்கொள்<br>• பள்ளியில் நிறைய தோழன்/தோழிகளை உருவாக்கிக் கொள்<br>• பள்ளி நடவடிக்கைகளில் உற்சாகமாக ஈடுபடு<br>• தேவைப்படும்போதெல்லாம் மன இறுக்கத்தைப் போக்கி மனத்தை இலகுவாக்கிக் கொள் |

கூடுதல் தகவல்களுக்கு,
moe_guidance_branch@moe.gov.sg



உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE




2023

உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்

# மாணவர் கையேடு

Umar Pulavar Tamil Language Centre